(இறை வேண்டல்)

பரமண்டலங்களில் வீற்றிருக்கும்
பரம பிதாவே, எந்நாளும்
பரிசுத்தப்படுக உம் நாமம்
பரிவுடன் வருக உம் ராச்சியம்
பரலோகத்தில் உமது சித்தம்
பண்புடன் செய்யப்படுவதுபோல்
தரணியிலுமது சித்தமுமே
தவறாது செய்யப்படுக சதா,
அன்றன்றுள்ள எம் ஆகாரம்
அன்புடன் எங்களுக்கீந்தருளும்
நன்றயலார்க் கடன் யாம் மன்னிக்கும்
நன்னயம் போலெம் பிழை மன்னியும்
தேவே, சோதனைக் கெமை விலக்கி
தீமையினின்றெமை இரட்சியுமே, மேவும்
ராச்சியம், வல்லமை மகிமை மிகவும்
உமதென்றென்றுமே, ஆமென்

செயற்பாடு

1. இப்பாடலை தாளத்துடன் பாடவும்.

2. இந்த ஜெபத்திலடங்கிய கருத்தை உமது வார்த்தையில் எழுதவும்.

3. இதை உமது நாளாந்த ஜெபத்தில் உபயோகிக்கவும்.